ஐக்கிய அமெரிக்கத் தூதரகம்
கொழும்பு
ஊடக அறிக்கை
பொது அலுவல்கள் பிரிவு
தொலை பேசி: +94 (11) 249-8100 ● தொலை நகல்: +94 (11) 244-9070
மின்னஞ்சல்: AngelicaB@state.gov ● இணையத்தளம்: http://lk.usembassy.gov

ஊடக அறிக்கை இலக்கம்: 20220315

கலாச்சாரப் பாதுகாப்பில் இரு மைல் கற்களை எட்டும் அமெரிக்கா

கொழும்பு, மார்ச் 15: இலங்கையின் பன்முக கலாச்சார மரபுரிமையினைப் பாதுகாப்பதற்காக அமெரிக்கா நீண்டகாலமாக வழங்கிவரும் உதவியின் இரண்டு மைல்கற்களை குறிக்கும் நிகழ்வுகளுக்கு தலைமை தாங்குவதற்காக இந்த வாரம் அமெரிக்கத் தூதுவர் ஜுலீ சங் கண்டிக்கு விஜயம் செய்தார்.

மார்ச் 14ஆம் தேதி, தூதுவர் சங் மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் எம்.டி. லமாவன்ச ஆகியோர் நான்கு பாரம்பரிய சடங்கு நடன வடிவங்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய கைவினைகளைப் பொருட்களை ஆவணப்படுத்திப் பாதுகாத்த கலாச்சாரப் பாதுகாப்பிற்கான அமெரிக்கத் தூதுவர்கள் நிதிய (AFCP) செயற்திட்டத்திற்கான ஒரு நிறைவு வைபவத்தினை நடத்தினர். 2016 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட 116,000 அமெரிக்க டொலர் பெறுமதியான இம்மானியமானது, பின்வரும் ஆற்றுகைக் கலைப் பாரம்பரியங்களைப் பாதுகாப்பதற்கும் பகிர்ந்து கொள்வதற்குமான பல்கலைக்கழகத்தின் முயற்சிகளுக்கு உதவிசெய்துள்ளது: 1) மலையக கண்டிய கொஹொம்ப கங்கரிய நடனம், 2) வடக்கு மற்றும் கிழக்கு தமிழ் கூத்து நடன நாடகம், 3) கிழக்கு மாகாண ஆதிவாசி சடங்குகள் மற்றும் கலாச்சார நடைமுறைகள், மற்றும் 4) தென் மாகாணத்தில் கோலம் பாரம்பரியத்தில் இருந்தான ஒரு தெற்கு நடன-நாடக சடங்குகள் மற்றும் ஆற்றுகைகள். இலங்கை மரபுரிமையின் இந்த அருவமான வடிவங்களின் பதிவுகள் தற்போது பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைப் பீடத்தின் நுண்கலைத் துறையின் கீழ் காப்பகப்படுத்தப்பட்டுள்ளன. பொது மற்றும் இணையவழி உசாத்துணைக்காக, குறுகிய வீடியோக்களை http://arts.pdn.ac.lk/afcp/ எனும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத் துறை இணையத்தளப் பக்கத்திற்கான இணைப்புகளுடன் இணையத்தில் பெற்றுக்கொள்ளக் கூடியதாயிருக்கும். “அமெரிக்கத் தூதரகம் மற்றும் பேராதனைப்

பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கு இடையேயான ஒத்துழைப்பின் ஒரு விளைவாக, இந்த கலாச்சாரங்களின் பாரம்பரியங்கள் பதிவு செய்யப்பட்டு எதிர்கால சந்ததியினர் அணுகக்கூடியதாக மாற்றப்பட்டுள்ளது. இந்த ஒட்டுமொத்த முயற்சியும் எமது நாடுகளுக்கிடையே உள்ள ஆழ்ந்த மரியாதை மற்றும் நெருக்கமான பங்காண்மையினைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது." என தூதுவர் சங் விளக்கினார்.

மார்ச் 15ஆம் தேதி, தூதுவர் சங் மற்றும் தொல்பொருள் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அனுர மானதுங்க ஆகியோர் உத்தியோகபூர்வமாக ஒரு புதிய செயற்திட்டத்தை ஆரம்பித்தனர்: அது, அமெரிக்காவிற்கும் இலங்கை தொல்பொருள் திணைக்களத்திற்கும் இடையிலான ஒரு AFCP பங்காண்மை. 265,000 அமெரிக்க டொலர் பெறுமதியான மானியமானது, பழைய கண்டி அரசர்களின் அரண்மனையினைப் பாதுகாப்பதற்கு உதவி செய்வதுடன், புனித தலதா மாளிகை வளாகத்தில் அமைந்துள்ள அரசர்களது அரண்மனையில் உள்ள தொல்பொருள் அருங்காட்சியகத்தினை மேம்படுத்துவதற்கும் நிதியளிக்கும். யுனெஸ்கோ உலக மரபுரிமைத் தளத்தின் இக்கூறுகளைப் பாதுகாப்பதானது எதிர்கால சந்ததியின் மாணவர்கள், அறிஞர்கள், இலங்கையர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு பண்டைய கண்டி இராச்சியத்தின் வரலாற்றைக் காண்பதற்கும் மற்றும் அதுபற்றி தொடர்ந்து கற்றுக்கொள்வதற்குமான ஆற்றலை வழங்கும். தூதுவர் சங் தனது கருத்துக்களில், "இன்றைய வைபவம் எமது இரு நாடுகளுக்கிடையிலான பங்காண்மையின் அகலத்தையும் தாக்கத்தையும் எடுத்துக்காட்டுவதுடன் எமது கடந்த காலத்தின் செழுமையைக் கொண்டாடுவதன் மூலம் நாம் ஒரு வலுவான எதிர்காலத்தை உருவாக்க முடியும் என்பதைக் காட்டுகிறது" எனக் குறிப்பிட்டார்.

2001 ஆம் ஆண்டு முதல், ரஜகல பௌத்த வன மடாலயத்தின் பாதுகாப்பு, அனுராதபுர தொல்பொருள் அருங்காட்சியகத்தில் உள்ள பௌத்த, இந்து மற்றும் பிற சேகரிப்புகளின் பாதுகாப்பு மற்றும் மட்டக்களப்பு டச்சு கோட்டையின் மறுசீரமைப்பு ஆகியவை உட்பட இலங்கையில் 14 செயற்திட்டங்களுக்கு AFCP நிதியளித்துள்ளது. இலங்கையில் கலாச்சாரப் பாதுகாப்பிற்கு AFCP எவ்வாறு உதவிசெய்கிறது என்பது பற்றிய மேலதிக தகவல்களுக்கு, அமெரிக்கத் தூதரக இணையத்தளமான https://lk.usembassy.gov/ இனைப் பார்வையிடவும்.

# # #

Photo captions:

Image 1 – அமெரிக்கத் தூதுவர் ஜுலீ சங் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பாரம்பரிய சடங்கு நடன வடிவங்களைப் பாதுகாப்பதைக் கொண்டாடும் நிகழ்வில் இணைந்து கொண்டார்.

Image 2 – பழைய கண்டி அரசர்களின் அரண்மனையினைப் பாதுகாக்கும் மற்றும் தொல்பொருள் அருங்காட்சியகத்தை மேம்படுத்தும் AFCP செயற்திட்டத்தை தூதுவர் சங் உத்தியோகபூர்வமாக தொடங்கி வைத்தார்.